# 2022ல் முன்வைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நெருக்கடி முகாமைத்துவக் கொள்கைகள் மீதான அதன் அர்ப்பணிப்புக்கான மதிப்பீடு

# இது என்ன மதிப்பீடு?

2022ல் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கொந்தளிப்பு உச்சக்கட்டத்தில் இருந்தபோது உருவாக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் செயலாற்றுகையை இந்த மதிப்பீடு கண்காணிக்கிறது. இந்த மதிப்பீடு மக்கள் அதிக சிரமங்களை அனுபவித்த 3 முக்கிய பகுதிகளைக் கண்காணிக்கிறது.



பட உதவி: AP

# இதன் நோக்கம் என்ன?

சுருக்கமாகச் சொல்வதானால், கண்காணிக்கப்படும் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தல் நிலை குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதே இலக்காகும்.

- மோசமான பொது நிதி முகாமைத்துவம் இலங்கை எதிர்கொண்ட நெருக்கடியின் முக்கிய காரணியாக இருந்தது.
- பொருளாதார மீட்பு என்ற பெயரில் மக்களிடம் இருந்து வரிப்பணம் பிழியப்படுகிறது, அது எங்கு செலவிடப்படுகிறது என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உள்ளது.
- அரசாங்கம் திறமையற்றது, பொறுப்பற்றது என்ற தொடர்ச்சியான பெயரைக் கொண்டுள்ளது.



பட உதவி: AP

PUBLIC FINANCE .lk

# என்ன கண்காணிக்கப்பட்டது?

இலங்கையின் நெருக்கடி வெளிப்படையாகத் தெரிந்ததும் மக்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்தியதுமான 3 விடயங்கள்; (1) அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை; (2) அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு/விலை உயர்வு (3) நீண்ட நேர மின்வெட்டு, மற்றும் எரிவாயு பற்றாக்குறை/விலை உயர்வு. இந்தத் துறைகளில் அமைச்சரவை முடிவுகளையும் முன்மொழிவுகளையும் நாங்கள் கண்காணித்தோம்:

சுகாதாரம் மற்றும் மருத்துவம்

உணவு மற்றும் விவசாயம்

எரிபொருள் மற்றும் ஆற்றல்

PUBLIC FINANCE .lk

# என்ன கண்காணிக்கப்பட்டது?

| சுகாதாரம் & மருத்துவம் | உணவு & விவசாயம் | எரிபொருள் மற்றும் ஆற்றல் |
|---|---|---|
| • அரச துறைக்கான **ஊசிமருந்துகளுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கிருமியழிக்கப்பட்ட திரவத்தை வாங்குதல்** பேரன்டெரல்ஸ் - SLSVP - | • 2021/22 **பெரும்போக** பருவத்தின் நெல் **கொள்வனவு**<br>• **சேதன** உரம் தயாரிக்கும் **தளவெளியை** உருவாக்குதல்<br>• விவசாய விதைகளை வீடுகளுக்கு விநியோகித்தல்<br>• நெல் விவசாயிகள் பெற்ற வாராக் கடன்களைத் தள்ளுபடி செய்தல்<br>• காலியாக உள்ள அரசு நிலங்களை விவசாய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதன் மூலம் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்க மாவட்ட அளவிலான குழுக்களை நியமித்தல்<br>• 2021/2022 **பெரும்போக** பருவத்தில் பசுமை விவசாய இடுபொருட்களைப் பயன்படுத்துவதற்கான ஊக்கத்தொகையை செலுத்தும் முறை<br>• 2022/23 **பெரும்போக** பருவ நெல் சாகுபடிக்குத் தேவையான இரசாயன மற்றும் **சேதன** உரங்களை கொள்முதல் செய்தல்<br>• **இணைந்து பயிரிடுவோம் - நாட்டை வெற்றி பெறச்செய்வோம் -பயிர் உற்பத்திக்கான தேசிய முனைப்பு** - 2022<br>• சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பயிர் **உற்பத்தி** திட்டங்கள் | • சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு **மசகு எண்ணெய்**<br>• **அனைவருக்கும் மின்சாரம்**<br>• புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்<br>• எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட மீன்பிடி மற்றும் போக்குவரத்து துறைகளுக்கு சிறப்பு நிவாரணத் திட்டங்கள்<br>• குறைந்த வருமானம் பெறும் பிரிவினர், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும் திட்டம் |

# என்ன கண்காணிக்கப்பட்டது?

2022ல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளுடன் கூடிய செலவின முன்மொழிவுகள், ஒழுங்குமுறை முன்மொழிவுகள் ஆகிய இரண்டையும் இந்த மதிப்பீடு உள்ளடக்கியுள்ளது.

மொத்தமாக 15 முன்மொழிவுகள் பின்வருவன மூலம் தெரிவு செய்யப்பட்டன:

- அமைச்சரவைத் தீர்மானங்கள்
- ஹன்சார்டுகள்



2016ம் ஆண்டின் **12**ம் இல. **RTI** சட்டத்தின் மூலம் பின்வரும் தகவல்கள் கோரப்பட்டன.

- செயல்படுத்துவதற்கான காலக்கெடு
- செயல்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு
- பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
- செயல்படுத்துவதை மதிப்பிடுவதற்கான பிற தொடர்புடைய தகவல்கள்

# நாங்கள் எப்படிக் கண்காணித்தோம்?

**அரசாங்கம் செய்வதைச் சொல்கின்றதா?**
**- வெளிப்படையானது -**

| | |
|---|---|
| | பகிரப்படவில்லை |
| | கட்டுப்படுத்தப்பட்டது |
| | பகிரப்பட்டது |

**அரசாங்கம் சொல்வதைச் செய்கின்றதா?**
**- முன்னேற்றம் -**

| | |
|---|---|
| | வெளிப்படுத்தப்படவில்லை |
| | மோசமானது |
| | பகுதியளவு |
| | கணிசமானது |
| | நிறைவேற்றப்பட்டது |

# கண்டுபிடிப்புகள்

2022ல் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது முன்மொழியப்பட்ட கொள்கைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியதா?

PUBLIC FINANCE .lk

கொள்கைகள் வெளியிடப்பட்டன, செயல்படுத்தல் பகிரப்படவில்லை.




RTI கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டபோது, வெறும் 3 பதில்களே (20%) பெறப்பட்டன. 1 (7%) பதில் மட்டுமே முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு பயனுள்ள தகவலை வழங்கியது.

PUBLIC FINANCE .lk

# அபிவிருத்தி நிதி திணைக்களம்

## முன்னேற்றம்

**4 ஜூலை 2022:** இரண்டு ஹெக்டேர் அல்லது அதற்கும் குறைவான நிலங்களில் நெல் உற்பத்திக்காக அரச வங்கிகளில் பெறப்பட்ட திருப்பிச் செலுத்தக் கடினமாக உள்ள கடன்களின் அசல் தொகையை தள்ளுபடி செய்ய அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டது

**30 ஆகஸ்ட் 2022** : **LKR 688 Mn** நிலுவையில் உள்ள கடன்களை தள்ளுபடி செய்ய, 2022 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் **LKR 350 மில்லியன் ஒதுக்கப்பட்டது**

**21 நவம்பர் 2022:**

- **பௌதீக முன்னேற்றம்** - 28,259 விவசாயிகளில் 25,775 கடன்கள் **[91.21%]**
- **நிதி முன்னேற்றம் - LKR 688 Mn** இல் LKR 561 Mn தள்ளுபடி செய்யப்பட்டது **[81.54%]**

**ஒட்டுமொத்த முன்னேற்றம் - 86.38%**

## வெளிப்படைத்தன்மை

வழங்கப்பட்ட தகவல்கள்:

- காலவரிசை
- **பௌதீக** முன்னேற்றம்
- நிதி முன்னேற்றம்

**முழுமையாகப் பயன்படுத்தக்கூடியது [100%]**

பதிலின் காலக்கெடு:

- தகவல் 14 நாட்களுக்குப் பிறகு பெறப்பட்டது, ஆனால் RTI தாக்கல் செய்த 21 நாட்களுக்குள் கிடைக்கப்பெற்றது.

**திருப்தி [50%]**

**ஒட்டுமொத்த வெளிப்படைத்தன்மை - 75%**

PUBLIC FINANCE .lk




கண்காணிக்கப்பட்ட 93% கொள்கைகளின் அமுலாக்க நிலை குறித்து பொதுமக்களுக்கு எந்தவிதத் தகவல்களும் கிடைக்கவில்லை...

பல செயற்படுத்தும் அமைச்சுகள் தங்கள் மேற்பார்வையின் கீழ்வரும் கொள்கைகள் குறித்து குழப்பம் அடைந்ததுடன் RTI கோரல்களுக்கு இணங்கவில்லை.

# கமத்தொழில் அமைச்சு

- 4 நவம்பர் 2022: 4 RTIகள் விவசாயத் **திணைக்களத்**திடம் தாக்கல் செய்யப்பட்டன
- 22 நவம்பர் 2022: RTIகள் கமத்தொழில் **அமைச்சுக்கு** மாற்றப்பட்டன
- 25 நவம்பர் 2022: தகவல்களை வழங்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் - **மேலதிக செயலாளர்** விவசாய அபிவிருத்தி மற்றும் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)
- 14 டிசம்பர் 2022: தகவல் அதிகாரியை அணுக முடியவில்லை மற்றும் தகவல் பெறப்படவில்லை.

| | |
|---|---|
| **RTI** பதிலை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி | 4 நவம்பர் - 16 டிசம்பர் 2022 (28 வேலை நாட்கள்) |
| பின்தொடரும் முயற்சிகள் | **x7** |
| அழைப்புகளுக்கான பதில்கள் | **x5** |
| வழங்கப்பட்ட பொய்யான வாக்குறுதிகள் | **x4** |

PUBLIC FINANCE .lk

# நெல் சந்தைப்படுத்தல் சபை

4 நவம்பர் 2022: 3 RTIகள் தாக்கல் செய்யப்பட்டன

15 நவம்பர் - 8 டிசம்பர் 2022: தகவல் பகிரப்படும் என்ற (பொய்யான) உறுதி

13 டிசம்பர் 2022: 1 RTI மட்டுமே தங்களின் வரம்பிற்குள் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது

15 டிசம்பர் 2022: தகவல் அதிகாரியை அணுக முடியவில்லை மற்றும் தகவல் பெறப்படவில்லை.

| | |
|---|---|
| **RTI** பதிலை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி | 4 நவம்பர் - 16 டிசம்பர் 2022 (28 வேலை நாட்கள்) |
| பின்தொடரும் முயற்சிகள் | **x7** |
| அழைப்புகளுக்கான பதில்கள் | **x6** |
| வழங்கப்பட்ட பொய்யான வாக்குறுதிகள் | **x6** |

PUBLIC FINANCE .lk

# ஏன் இந்த பொறுப்புக்கூறல் இன்மை முக்கியமானது?



PUBLIC FINANCE .lk

## 01

இலங்கையில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, பொது நிதிகளின் பயன்பாடு மற்றும் நிர்வாகம் தொடர்பாக அரசாங்கத்திடம் இருந்து பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை அதிகரிக்க வேண்டும் என்பதாகும். நெருக்கடி, குடிமக்களின் துன்பம் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை இருந்தபோதிலும், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அதிகாரத்துவம் மாறுவதற்கு விருப்பம் காட்டாமை கவலைக்குரியது.

## 02

அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அரச அலுவலர்கள் பொதுமக்களின் வசதிக்காக செயற்படுவது பிரதான பொறுப்பு என அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் செப்டெம்பர் 2022ல் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவித்திருந்தார். யாருக்கும் இடையூறு ஏற்படாத வகையில் திறமையான சேவையை வழங்குவதற்காக அனைத்து அமைச்சுக்களிலும் அரச நிறுவனங்களிலும் பதில் வேலைத்திட்டத்தை உருவாக்குவது கட்டாயம் எனவும் அறிவித்தார்.

## 03

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போதே 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகும், பகிரங்கப்படுத்த வேண்டிய தகவல்களை வெளியிடாமல் சட்டத்தை வலுவிழக்கச் செய்வது கவலைக்குரியது.

PUBLIC FINANCE .lk

# அரசாங்கம் வழக்கம் போல் செயல்பட்டால், நிலையான பொருளாதார மீட்சி எப்படிச் சாத்தியமாகும்?

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை பொதுமக்களின் அவநம்பிக்கையை மேலும் அதிகரிக்கிறது, அத்துடன் அதிகாரம் மற்றும் பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதை எளிதாக்குகிறது - இவையே நெருக்கடியின் முக்கிய ஊக்கிகளாக இருந்தன.

PUBLIC FINANCE .lk